**அக்மீமன பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்மீமன பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அக்மீமன பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) பௌதீக திட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 2,077,750 தொகை நிகழ்ச்சித் திட்டத்தை மாற்றி பொது நிருவாகத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய வருமானம் மற்றும் செலவுகள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) சபைக்குச் சொந்தமாக காணப்படாத ரூபா 6,221,373 தொகை பெறுமதியான கம்பெக்டர் வண்டி, மோட்டார் வாகன மீதியுள் காட்டப்பட்டிருந்ததுடன், ரூபா 1,700,000 பெறுமதியான சபைக்குச் சொந்தமான 04 வாகனங்களை ஆண்டின் போது கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2021 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (iii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 99,075,401 தொகைக்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,860,319 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 7,772,500 கிடைக்க வேண்டியிருந்ததுடன், ரூபா 80,819 தொகை கிடைக்க வேண்டியதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அட்டவணைகள் காணப்படவில்லை என குறிப்பிடுகின்றேன். | |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 28,328,618 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் ஏனைய அட்டவணைகளை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடுகின்றேன். | நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், வைப்புக்கள் பதிவேடு மற்றும் காலப் பகுப்பாய்வு பேணப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 149 | 1968 இன் 14 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் என்பவற்றின் மொத்த வருமானத்தின் மீது வரி அறவிடப்பட வேண்டி இருந்த போதிலும், விற்பனையின் மீது மாத்திரம் வரி அறவிடப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 41,551 இற்கான தொகை ஒன்றினை மீளாய்வாண்டின் போது இழந்துள்ளது. | உரிய மீதி தொடர்பாக விரிவான தகவல்கள் பெற்றுக் கொண்ட பின்னர் சரியான நடைமுறை ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அதிகார சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 36,417,980 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,887,137 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் ரூபா 12,396,200 தொகைக்கான நிலுவை வீதவரியும் வரியும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் என அறிவிக்கின்றேன். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | **ஏனைய வருமானங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் ரூபா 164,814,664 தொகைக்கான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் என அறிவிக்கின்றேன். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் தலகஹ ஹெட்டிய கம்மெத்த வயல் காணியின் பகுதி ஒன்று உரிமையாளரின் விருப்பமின்றி சபையின் பெயரிற்கு 1997 திசெம்பர் 11 திகதி உரித்தாக்கப்பட்டு உரிமையாளரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு ஒன்றின் காரணத்தினால் ரூபா 1,187,475 இற்கான தொகை ஒன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன், | உரிய மந்திரிமாரிடம் மிகை விதிப்புச் செய்து அறவீடு செய்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்திருந்த போதிலும் இது வரை பதில் கிடைத்திருக்காததுடன், இருந்ததுடன் 657 ஆம் இலக்க வழக்கு தற்போது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது என குறிப்பிடுகின்றேன். | சட்டங்கள், விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட காணியின் கட்டிடம் அப்புறப்படுத்தப்பட்ட காரணத்தினால் ரூபா 46 இலட்சம் நட்டஈடு கோரி வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | | |
| (ஆ) | மஹவத்த மையவாடியை சபைக்கு உரித்தாக்குவதற்காக ரூபா 1,380,000 வைப்பொன்று 2004 மே 31 திகதி வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை இது வரை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட மையவாடியை உரித்தாக்கும் விடயங்கள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என கருணையுடன் அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட மையவாடியை சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |